உ

சர்தார்

அ. வேதரத்னம் M. L. A.

அவர்களின்

T12666

R003L02

T12666

# வாழ்க்கை வரலாறு



சர்தார் அ. வே

T012666
Sarasvati Mahal Library.Thanjavur

# சர்தார் அ. வேதரத்தினம் M. L. A.

## அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

"ஒன்ற உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றில்."

இவ்வுலகில் தோன்றும் மனிதர் யாவரும் இறைவனுக்கும், மக்களுக்கும் ஏற்ற பல தொண்டுகளைச் செய்து இறவாப் புகழ் எய்த வேண்டுவதே முறையாகும். ஆயின், அம்முறைப்படி பிறப்பார் அனைவரும் அத்தகைய நல்லோராகவும், தொண்டு செய்து வாழ்பவராகவும் இருப்பதில்லை. வறிதே உண்டு, உடுத்து, உறங்கித் தங்கள் வாணாளை வீணாளாக்குகின்றனர். அவ்வாறின்றி, சாக்கிய நாட்டில் சித்தார்த்தர் என்னும் செந்தாமரையும், யூதேயா நாட்டில் இயேசு என்னும் எழில் முல்லையும், வங்க நாட்டில் விவேகானந்தர் என்னும் செங்கழு நீரும் தோன்றி, தாம் நல்வழியில் சென்று உலகினரையும் அந்நெறியில் திருப்பி நற்பயன் விளைத்தனர். இதனாலேயே அன்னோர் தெய்வப் பிறவிகளாகப் போற்றப் படுகின்றனர். இத்தகைய மாண்பு மிக்க அரும் பெரும் மனிதர்களும் திடீரென்று தோன்றி விடுவது இல்லை. சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப அவர்கள் உருவாக்கப் படுகின்றனர்.

அடிமைத் தளையில் சிக்குண்டு கிடந்த நம் இந்திய நாட்டை மீட்பதற்கு தேசத் தந்தையாம் காந்தியடி

கள் இந்திய மக்களின் அறியாமை என்னும் இருளை நீக்கி, அவர்களை 'நல்வாழ்வு' என்னும் ஒளிமயமான இடத்திற்கு அழைத்துச் சென்றார். 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்' என்ற பாரதி வாக்கினை உணர்ந்து தேசத்தின் விடுதலைக்காகத் தங்களுடைய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் ஈந்தவர் பலராவர். அவர்களில் தமிழகத்தின் கண் தோன்றிய மறைக்காட்டு அண்ணலாம் சர்தார் **அ. வேதரத்தினம்** அவர்கள் அன்பே உருவாகக் கொண்டு, காந்தீய நெறியில் நின்று, தளராத உள்ளத்தைப் பெற்று கடமை வாழ்வு நடத்தி வந்த ஒரு தோன்றல். அன்னையின் கை விலங்கு அகற்ற தியாகங்கள் பலவும் செய்திட்ட அண்ணல் என்பது யாவரும் அறிந்த ஒன்று. தேச பக்தராகவும், கடமை வீரராகவும், காட்சிக்கு எளியவராகவும், கடுஞ் சொல்லர் அல்லாதவராகவும், "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் பொய்யா மொழியின் கூற்றிற் கேற்ப உலகினர் அனைவரும் புகழும்படி வாழ்ந்து மறைந்த அண்ணல் சர்தார் வேதரத்தினம் அவர்களைப் பற்றி ஈண்டாராய்வோம்

**தோற்றம் :**

நம் பழந்தமிழ் நாட்டின் கண் பழமையும், பெருமையும் கொண்ட நல்லூர்கள் பல உள. அவற்றுள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த, மறைகள் இறைவனைப் பூசித்து வரம் பெற்ற, திருமறைக்காடு என்னும் பெயரினைப் பெற்ற வேதாரணியம் என்னும் திருத்தலத்தில், 25—2—1897 ஆம் ஆண்டு அப்பாக்குட்டிப்

பிள்ளை என்பவருக்கும், தங்கம்மாள் என்னும் அம்மையாருக்கும் மூன்றாவது திருமகனாகப் பிறந்தார். நல்லோர் பிறக்குங் காலை, சில நன்னிமித்தங்கள் தோன்றுவது உலக இயற்கையாம். அதன்படி நம் அருந்தலைவர் பிறக்கும் நாளன்று வேதாரணிய சுவாமி கோயில் பெரிய தேரோட்டமாகும். வழக்கமாக தேரோட்டத்தின் போது நான்கு வீதிகளிலும் வெடிகள் முழங்க தேர் ஓடி நிலை நிற்கும். ஆயின் அன்றோ, நம் அருந்தலைவர் பிறக்கு நேரமாதலின், மேலவீதி, வடக்கு வீதி, கீழ வீதி ஆகிய மூன்று வீதிகளிலும் வெடிகள் இன்றியே தேர் இழுக்கப் பட்டது. ஊரவர் அனைவரும் இச் செயலைக் கண்டு களிகூர்ந்து இக் குழந்தை 'தெய்வப் பிறப்பு' எனப் புகழ்ந்தனர். மூதாதையர் தாயுமானவர் வழி வந்தவர்களாதலின், சைவத்திலும், தெய்வ பக்தியிலும், தமிழிலும் பெரும் பற்றுடையவர்களாய் விளங்கி, தம் தவப் புதல்வருக்கும் அறநெறியையே கற்பித்தனர். எனவே சிறு வயது முதற் கொண்டே கல்வி, பொறுமை, தூய்மை, உறுதி, வெகுளாமை, அன்பு, அடக்கம், தியானம் என்னும் பண்புகளுக்கோர் பிறப்பிடமாக விளங்கினார். அதனாற்றான் பகைவரிடமும் வெறுப்பின்றிப் புன்முறுவல் பூத்து, 'அன்பு எல்லாத் தடைகளையும் வெல்லும்.' என்று காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய விளக்கத்தின் மறு உருவமாக அவரைக் காணமுடிந்தது. இன்னணம் சிறப்புடன் தோன்றிய நம் செம்மல் வானத்தின் மிசையின்றி மண்ணில் வளரும் மதிக் கொழுந்தைப் போல அறிவிலும் திருவிலும் சிறந்து வளரத் தொடங்கினார்.

கல்வி :

கல்வி என்பது பள்ளிப் படிப்பினேடு உலகியலில் நாம் அன்ருடம் பெறும் அனுபவங்கள் யாவுமேயாகும். பள்ளிப் படிப்பின்றி, உலகக் கல்வி கற்று வாழ்வில் உயர்வுற்ருேர் எண்ணிலடங்கார். அதன்படி வேத ரத்தினம் அவர்கள் ஆரம்பத்தில் அவ்வூர் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் சில ஆண்டுகள் பயின்ருர். பின்னர் அம்மாவட்டத்தைச் சேர்ந்த நாகைப்பட்டினத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஏழு வகுப்புகள் வரைதான் பயின்ருர். ஆயின், பிற்காலத்தில் அவர்கள் பெற்ற பன்மொழியறிவும், பொது அறிவும் பள்ளியில் பல ஆண்டு காலம் பயின்ற பலர் பெற்றிலர். தாய் மொழியிலும், கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம், உருது, தெலுங்கு, ஆங்கிலம், வங்காளம் முதலிய மொழிகளிலும் அவருக்கிருந்த தேர்ச்சியினைக் கூற இயலாது. 'முயன்ருல் முடியாதது ஒன்று இல்' என்னும் பழமொழியினை உணர்ந்து தாமே முயன்று அம்மொழிகளை எல்லாம் கற்றதனுல் அவைகளில் நல்ல தேர்ச்சியினை அடைய முடிந்தது அவரால். திருக்குறள் தாயுமானவர் பாடல்கள், திரு மந்திரம், கீதை, காந்தியடிகள் நூல்கள் பல மொழிகளிலும் இயற்றப்பட்ட பல புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும் இவருக்கெனத் தனியே இருந்ததால், தம்முடைய கல்வியறிவை வளர்த்துக் கொள்ள அவையும் காரணமாக இருந்தன. இதிலிருந்து இவருடைய கடலன்ன கல்விப் பற்றும், மொழிப் பற்றும் உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்கும்.

## திருமணம் :

பள்ளி வாழ்க்கையினின்றும் விடுபட்ட சர்தார் அவர்கள் தம் ஊரிலேயே இருந்து விவசாயத்தினையும் உப்புத் தொழிலையும் மேற்கொண்டு பெரும் பொருள் ஈட்டினர், இந்நிலையில் நம் தலைவருக்கு வயது பதினறு நிரம்பிற்று. அன்னரை இல்லறத் துறையில் ஈடுபடுத்த வேண்டுமென விரும்பினர் அவர் தம் பெற்ருேர். 'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது பொன்மொழி யல்லவா? அதன்படி கி. பி. 1912 ஆம் ஆண்டு சர்தார் அவர்கள் தனது தாய் மாமன் மகள் **கமலாம்பாள்** என்னும் நற்காரிகையை மணந்து, இல்லற வாழ்வு என்னும் பூக் கமழ் சோலையிலே நுழைந்தார்.

> ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.''

என்னும் வள்ளுவத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது அவர் தம் வாழ்க்கை எனின் அது மிகை யாகாது. இல்லறத்தின் பண்பான அன்பினைப் பெற்ற இருவரும், இல்வாழ்வின் பயனுகிய விருந்தோம்பும் பணியில் சிறந்தனர் என்ருல் இவர் தம் இல்லறத்தின் சிறப்பினை என்னென்று உரைப்பது? இல்லறத்தின் பயன்களில் ஒன்று மக்கட் பேறன்ருே? அதற்கேற்ப அவ்விருவருக்கும் ஒரே மகனுகத் தோன்றியவர்தாம் இன்று தந்தையார் செய்து வந்த பணிகளைத் தானும் செய்து, தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ் கின்ற உயர் திரு வே. அப்பாக்குட்டி அவர்களாவார்கள்.

## அரசியல் வாழ்க்கை:

"பாரத நாடு பழம் பெரும் நாடே
பாரினில் வேறிலை இதற் கினி யீடே"

என்னும்படி பழமையும், புதுச் சிறப்பும் பொருந்தி இலங்குவது நம் தாய்த் திருநாடு. தொன்று தொட்டே வீரத்திற்கும், நாட்டுப் பற்றிற்கும், கலாச்சாரத்திற்கும் இலக்கியத்திற்கும் பேர் போன நாடு இது. "ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" என்னும் கவிக் கூற்றை உணராததால் அனைத்திலும் பெருமை பெற்று விளங்கிய நாம் சாதியாலும், சமயத்தாலும் பிரிந்து வீழ்ந்து பட்டோம். வணிகராய் வந்த வெள்ளையர் சுமார் 300 ஆண்டுகள் நம்மை அடிமைப் படுத்தி ஆண்டனர். அவர்தம் ஆட்சியில் இன்னலுற்ற மக்கள் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கினர்.

வெள்ளையரின் ஆட்சியை ஒழிக்க, காங்கிரஸ் என்னும் பெரும் ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. 'சுதந்திரம் எமது பிறப்புரிமை' என்று முழங்கிய தலைவர்கள் பலர், தொண்டு செய்து உரிமையின்றி வாழும் வாழ்க்கையை வெறுத்து, மக்கள் மனதில் விடுதலை வேட்கையை வளர்த்து, சுதந்திரப் பயிருக்கு நீரூற்றி அதனைக் காத்தனர்.

நாடு இந்நிலைமையிலேயே இருக்க, சர்தார் அவர்கள் வியாபாரத் துறையில் இளமையிலேயே ஈடு பட்டாலும் அதில் தம் முழு மனதையும் செலுத்தவில்லை. 1920 ஆம் ஆண்டு 'பெல்கா'மில் காந்திஜி தலைமையில் காங்கிரஸ் மகா நாடு நடந்தது. அதில் கலந்து சர்தார்

அவர்கள் விடுதலை வேட்கையில் ஊர் திரும்பியதும் மக்கள் மனதில் சுதந்திரக் கனலை மூட்டினார். காங்கிரஸ் கட்சியின் மீதும், அதனை நடத்தி வந்த தேசத்தந்தை காந்தியடிகள் மீதும் இவருக்குப் பெரும் பற்றும், மதிப்பும் ஏற்பட்டது.

1913 ஆம் ஆண்டு வேதாரணியத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில், திரு சத்தியமூர்த்தி அவர்கள் அந்நிய ஆடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார். அதைக் கேட்டதிலிருந்து அவ்வகைத் துணிகள் அணிவதை விடுத்து சுதேசித் துணிகளையே உடுத்த ஆரம்பித்தார். பிற்காலத்தில் அவர்கள் தாம் நூற்கும் நூலையே நெய்து அதை மட்டுமே உடுத்துவதை வழக்கமாகக் கொண்டார். செயலிலும், வாழ்க்கை முறையிலும் காந்தியடிகளையே பின்பற்றுபவர் ஆதலின், மேலுக்கும் மேல்துண்டு ஒன்றினையே அணிவது இவர்தம் வழக்கமாய் இருந்தது. தாம் மட்டும் கதர் உடுத்துவதோடு அமையாமல் கதரின் சிறப்பை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களையும் அணியும்படி தூண்டினார். அவர் தம் குடும்பத்தினரும், ஊரின் பெரும்பான்மையினரும் இன்றளவும் கதர் அணிவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்றால் அதில் வியப்பொன்றும் இல்லை.

1924 ஆம் ஆண்டு முதல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகவும், 25 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களுக்கு பிரதிநிதியாகவும் சென்றுள்ளார். 1926 ஆம் ஆண்டு வேதாரணியத்தில்

நடந்த அரசியல் மா நாட்டிற்கு S. சீனிவாச ஐயங்கார் அவர்கள் தலைமை வகித்த பொழுது நம் சர்தார் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணி செய்தார். 1929 ஆம் ஆண்டு வேதாரண்யத்தில் நடந்த, 53 வது மாகாண அரசியல் மகா நாட்டிற்கு சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் தலைமை வகித்த பொழுது, இவர் வரவேற்புக் குழுச் செயலாளராகப் பணியாற்றினர்.

1930 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அறிஞர் திரு. இராஜாஜி அவர்கள் தலைமையில் 'உப்புச் சத்தியாக்கிரகம்' வேதாரண்யத்தில் நடத்துவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. வேதாரண்யத்தில் அதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் முன்னதாகவே தயார்செய்து வைத்தனர் நம் சர்தார். இதன் காரணமாக இவர் சிறை பிடிக்கப்பட்டு, அவர் தம் உப்பு நிலங்கள் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் போடப்பட்டன. சென்னை மாகாணத்திலேயே இங்ஙனம் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் போடப்பட்டது சர்தார் அவர்களின் சரித்திரத்தில் மட்டும் தான் நடைபெற்றிருக்கிறதெனில் இவரது தேச பக்தி என்னும் தீ ஆங்கிலேயரை எவ்வளவு தூரம் சுட்டெரித்திருக்க வேண்டும் என்பது சொல்ல வேண்டுவது இல்லை. அன்றியும் சத்தியாக்கிரகத்தின் காரணமாக ஆறு மாதங்கள் சிறைவாசமும், ரூ 200 அபராதமும் விதிக்கப்பட்டன. வட நாட்டில் நடந்த தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தைப் போல தென்னாட்டில்–வேதாரண்யத்தில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் பெரும் பெயர் பெற்றது.

1931 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் மகாநாடு நடைபெற்றது. நம் தலைவரின் சேவைகளைப் பாராட்டி அன்னாருக்குச் ‘சர்தார்’ என்னும் பட்டம் சூட்டப்பட்டது. மகா நாடு முடிந்த பின், ஒரு வாரம் அந்த மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து, பொதுக்கூட்டம் நடத்திய போது அரசாங்கத்தை எதிர்த்து துவேஷமாய்ப் பேசிய தாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டாம் முறையாகக் கைது செய்யப்பட்டார்.

1932 ஆம் ஆண்டு காந்தியடிகள் இரண்டாவது வட்ட மேஜை மகா நாட்டிற்காக இங்கிலாந்து சென்றார். அவர் திரும்பியவுடன், தேச பக்தர்கள் தீவிரமாகச் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கினர். நம் சர்தாரின் சூருவளிப் பயணத்தைக் கண்டு ஓரத்த நாட்டுக்கருகில் மூன்றும் முறையாகக் கைது செய்தனர். 1937-ல் சாத்தன்குளம் வழக்கில் சம்பந்தப்பட்டு, இராஜத் துரோகம் புரிந்ததாகவும், 1939-ல் யுத்த மறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகவும் முறையே 6, 8, 9 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக் கப்பெற்று வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, என்னும் ஊர்களில் சிறைவாசம் செய்தார் நம் செம்மல் எனின், இவரது தேசபக்தியின் அளவினைக் கூறவும் முடியுமோ?

இத் தருணத்தில் வேதாரண்யத்தில் அந்நியத் துணிகள் விற்கும் கடை ஒன்று சர்தார் அவர்களுக்கு இருந்தது. “நம் நாட்டுத் துணிகளையே, சுதேசிப் பொருட்களையே பயன் படுத்த வேண்டும்” என்று

கதரையே உடுத்தத் தொடங்கிய போது அந்நியத் துணிகள் விற்கும் கடையை மூடிவிட்டார்கள். உப்புச் சத்தியாக்கிரகத்தினுல் உப்பு நிலங்கள் கைவிட்டுச் சென்றன. மற்றும் வருவாய் தருகின்ற கடையையும் மூடி விட்ட பின் வறுமை என்னும் பேய் அவரது இல்லத்தில் தலைவிரித்தாடியது.

> ''நாடறியப் பட்ட பெருஞ் செல்வர் நல்கூர்ந்து
> வாடிய காலத்தும் வட்குபவோ.''

என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக, இலக்கியமாகத் திகழ்ந்து, தனக்குற்ற இடுக்கண் பலவற்றையும் நாட்டு விடுதலைக்காக ஏற்றுக்கொண்டார் எனின் அவர் தம் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

உப்புச் சத்தியாக்கிரகத்திலிருந்து அறிஞர் திரு. இராஜாஜி அவர்களைத் தம் அரசியலில் குருவாகக் கொண்டார். 1929—1939 வரை (பத்து ஆண்டுகள்) நம் சர்தார் அவர்கள் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் பதவியை திறம்பட நிர்வகித்து 'இந்திய நாடு முழுமையும், இது போல் செயலாற்றும் பிறிதொரு குழு இல்லை' என்று அக்காலத்தில் தென்னுட்டுப் பயணம் செய்த திரு. இராசேந்திர பிரசாத், திரு. படேல் முதலியவர்களால் நேரில் கண்டு பாராட்டப் பெற்ருர். அன்றியும் வேலூரில் நடந்த தமிழ் நாடு மாகாண அரசியல் மாநாட்டிற்குத் தலைவராக இருந்து நடத்தியிருக்கிருர்.

அரசியல் வாழ்வில் நம் தலைவர் அவர்களுக்கு 'தோல்வி' என்பதே ஏற்பட்டதில்லை என்பதை ஈண்டு குறிப்பிட வேண்டுவது அவசியம். சர்தார் அவர்கள்

1937 முதல் 1939 வரை சென்னை சட்டமன்ற உறுப்பினராக தஞ்சை மாவட்டத்துத் திருத்துறைப்பூண்டித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றினார். 1937 ஆம் ஆண்டில் மாகாண சட்ட சபைகள் ஏற்படுத்துவதற்கு தேர்தல்கள் நடைபெற்றன. அவ்வமயம் தஞ்சை ஜில்லாவில் அத்தேர்தலுக்குப் பெருந்தனக்காரர் ஒருவர் போட்டியிட்டார். அவரை எதிர்த்து நிற்பதற்கு இத் தொகுதியிலிருந்து யாருமே முன் வரவில்லை. தேர்தல் பிரசாரத்திற்கு வந்த சர்தார் வல்லபாய் படேல் அவர்கள், நம் சர்தாரை அழைத்து காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு நிற்கச் சொன்னார். ஆயினும், சர்தார் " தான் காங்கிரஸில் சாதாரணத் தொண்டனாகவே பணியாற்ற விரும்புவதாகவும், எந்த விதப் பதவியும் தனச்கு வேண்டியதில்லை என்றும் " அடக்கத்துடன் கூறினார். இது கேட்டு சினம்கொண்ட படேலோ, " நான் ஒரு சேனைத் தலைவன்; தலைவன் கட்டளையைத் தொண்டன் ஏற்று நடத்த வேண்டும் " என்று கட்டளையிட்டார். தலைவரின் பேச்சைத் தட்ட முடியாத சர்தார் அவர்கள் காங்கிரஸ் சார்பில் மன்னார்குடி–திருத்துறைப்பூண்டித் தொகுதியில் நின்றார்கள். சர்தார் காங்கிரஸ் சார்பில் போட்டியில் நிற்கிறார் என்று தெரிந்தவுடனேயே அக்கனவான் போட்டியினின்றும் விலகிக் கொண்டது மட்டுமல்லாமல் அன்னாருக்கு உதவியும் செய்தார். போட்டியிட்ட பிற கட்சியினரெல்லாம் 'டிபாசிட்' இழந்தனர். மிகப் பெரிய வெற்றியை எய்திய சர்தார் அவர்கள், சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் பதவியையும் ஏற்றார்.

இதையடுத்து 1946 ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலிலும் காங்கிரஸை எதிர்த்த 'கம்யூனிஸ்ட்' அபேட்சகரை எதிர்க்க யாரும் முன் வராததால் இராஜாஜி அவர்களின் வற்புறுத்தலின் பேரில் சர்தார் அவர்கள் போட்டியிட்டு மும் மடங்கு அதிக வாக்குகள் பெற்று ஜெயித்தார்.

இதன் முன்னர் 1940 ஆம் ஆண்டு காந்தியடிகள் 'தனி நபர் சத்தியாக்கிரகம்' என்னும் இயக்கத்தைத் தொடங்கி, 'வெள்ளையனே வெளியேறு' என்று கோஷமிட்டார். நம் தலைவர் அவர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டு சத்தியாக்கிரகம் நடத்தினார். அதன் காரணமாக நான்காம் முறையாக மீண்டும் சிறை சென்றார். ஒன்பது மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்றார்.

1957 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலும், முன்பு [1946 ஆம் ஆண்டு] போட்டியிட்ட அதே கம்யூனிஸ்ட் அபேட்சகரை எதிர்க்க யாரும் முன் வராததால் மத்திய பார்லிமெண்டரி போர்டின் ஆணைப்படி, பலத்த போட்டிகளிடையேயும், 7000 வாக்குகள் மிகுதியாகப் பெற்று வெற்றி பெற்றாரெனின், இவரிடத்து மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், அன்பிற்கும் எல்லையுண்டோ?

பாரதத் தலைவர்களும், தொண்டர்களும் அரும்பாடுபட்டு செய்த தியாகங்களின் பயனாக 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் சுதந்திரம் நம்மை வந்தடைந்தது. தேச விடுதலைக்காகப் பாடு

பட்ட தொண்டர்கள் அதன் பின் தேச முன்னேற்றத்திற்கு வேண்டிய பணிகளைச் செய்ய முன் வந்தனர். காந்தியடிகள் காட்டிய பாதை வழியே நடக்கத் தலைப்பட்டனர். திரு. வேதரத்னம் அவர்கள், தாம் M. L. A. பதவியேற்ற பின் தம் தொகுதிக்குச் செய்துள்ள நன்மைகள் அளவிடற்கரியன. வேதாரணியமும், அதனை யடுத்த பல சிற்றூர்களும் நல்ல ரஸ்தாக்களையும், மின்சார வசதிகளையும் பெற்று வளமுற்றது. மற்றும் பாசன வசதிகள், படிப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் என்னும் இவை இவர் தம் அரு முயற்சியால் கொண்டு வரப்பட்டன.

அரசியல் வாழ்வில் திரு. அவினுசிலிங்கம் செட்டியார், திரு. சுப்பராமன் என்னும் இவர்களைத் தம் நெருங்கிய நண்பர்களாகக் கொண்டிருந்தார். திரு. சுப்பராமன் அவர்களைத் 'தென்னுட்டுக் காந்தி' என அழைப்பர். அவ்விருவரும் பொறுப்பாக இருந்து குருகுலத்திற்காக பல உதவிகளைச் செய்துள்ளனர். குருகுலத் தந்தை அ. வேதரத்தினம் அவர்கள் இறந்த பின்னரும் கூட பல செயல்களுக்குப் பொறுப்பாளராக இருந்து வருகின்றனர்.

**தொண்டு வாழ்க்கை :**

'என் கடன் பணி செய்து கிடப்பதே.'; 'மக்கள் சேவையே தேசசேவை'; ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே யல்லாமல் வேறென்றறியேன் பராபரமே'' என்பன ஆன்றோர் மொழியன்றோ? அதன்படி நம் சர்தார் அவர்கள் மக்கட்குப் பணிபுரிவது ஒன்றையே தம் வாழ்நாள் முழுவதும் பெருங் கடமையாகக் கொண்டிருந்தார்.

வேதாரண்யமும், அதன் சுற்றுப் புறமும் கடலை அடுத்திருப்பதால் இப்பகுதிகளில் அடிக்கடி கடல் பொங்கி வெள்ளம் வருவது இயற்கை. இக்காலங்களி லெல்லாம் நம் தலைவர்கள் வெள்ள நிவாரண வேலை களையும், புயல் நிவாரண வேலைகளையும் தோற்றுவித்து அரும்பாடுபட்டு அழிந்த பல குடும்பங்களைக் காப்பாற்றி யிருக்கிறார்.

1935 ஆம் ஆண்டு வேதாரணியத்தில் முதன் முறையாகப் புயல் வீசியதால் பெருத்த நஷ்டம் ஏற் பட்டது. 'வெள்ளக் கஷ்ட நிவாரணக் குழு' ஒன்று அமைத்து நிதி வசூல் செய்து ஏழை எளியவர்களுக்கு உதவினார். 1952 ஆம் ஆண்டு மீண்டும் இரண்டாம் முறையாகப் புயல் வீசியது. வீடிழந்தவர்களுக்கு தலா 30 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. மூன்றும் முறை யாக 1955 ஆம் ஆண்டு பெரும்புயலும் அடித்தது. கடலும் கொந்தளித்தது. உப்பளக்காரர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது இதனை எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குக் கூறி தக்க சமயத்தில் உதவி செய்ததை யாரால் மறக்க முடியும். உப்பளக்காரர் களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 150 ரூபாய் மானியமும் 350 ரூபாய் கடனுகவும் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

சர்தார் அவர்கள் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி களுடன் ஒத்துழைத்து இராமகிருஷ்ணபுரம் என்ற காலனியைத் தோற்றுவிப்பதற்கு வித்திட்டனர். அங்கு சுமார் 200 வீடுகள் உள்ளன. அவர்களுக்கென்று தனியாக பள்ளிக்கூடம், பிரார்த்தனைக் கூடம், ரோடு வசதி, விளக்கு வசதி முதலிய பலவும் இருக்கின்றன.

சர்தார் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலேயே தாம் சட்டசபை அங்கத்தினராகப் பணிபுரிந்த போது அதில் கிடைத்த ஊதியத்தை அப்படியே கோவையில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்திற்குப் பல ஆண்டுகள் வரை அனுப்பி வந்திருக்கிறார். மேலும் அன்னை கஸ்தூரிபா தேசீய ஞாபகார்த்த நிதி தஞ்சை ஜில்லாக் கமிட்டிக்குச் செயலாளராக இருந்து, பல கிராமங்களிலும், ஊர்களிலும் அன்னை கஸ்தூரிபா பெயரால் பள்ளிகளும், மருத்துவ மனைகளும் திறந்தார். காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களுள் முக்கியமானவையாகிய ஆதாரக் கல்வியிலும், பெண்கள் முன்னேற்றத்திலும் பங்கு கொண்ட இவர் வேதாரண்யத்தில் 1946-ஆம் ஆண்டு 'ஸ்ரீ கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்' என்னும் ஆதாரப் பெண் பாடசாலையை நிறுவி அதன் கண் ஹரிஜனப் பெண்களையும் இதர ஏழை அனாதைப் பெண்களையும் ஜாதி, மத வேறுபாடு இல்லாமல் சேர்த்து அவர்கட்கு இலவச உணவு, இருப்பிடம், கல்வி என்னும் இவற்றை அளித்து வருகிறார். வேதாரண்யத்தில் தாயுமானவர் வித்தியாலயம் என்னும் ஆதாரப் பள்ளிக்கூடத்தையும் நடத்தி வருகிறார்.

சர்க்காரால் அமைக்கப்படும் பல கமிட்டிகளிலும் இவர் அங்கத்தினராய் இருந்துள்ளார். தமிழ் நாடு மாகாண உப்பு உற்பத்தியாளர் சங்கம், அகில இந்தியக் கிராமக் கைத்தொழிற் சங்கம் என்னும் இவற்றில் அங்கத்தினராகவும் இருந்து பணிபுரிந்தார். திருச்சி வானொலி நிலைய ஆலோசனைக் கமிட்டியிலும்

உறுப்பினராக இருந்திருக்கிருர். 'சர்வோதயக்' குழுவில் காந்தீயத்தைப் பரப்புவதற்கென அமைக்கப்பட்ட பன்னிரண்டு உறுப்பினர்களில் இருவரும் ஒருவராக இருந்தார்.

நம் இந்திய நாடு பெரும்பான்மையும் கிராமங்கள் நிறையப்பெற்றது. அதனுல் தான் காந்தியடிகள் கிராமச் சீர்திருத்தத்தையே மிகவும் விரும்பினுர். அதன் பொருட்டு கைக்குத்தலரிசி, முதியோர் கல்வி முதலிய நிர்மாணத் திட்டங்களை வெளியிட்டிருந்தார். இவற்றையும் தம் தொகுதியில் செயற் படுத்தினுர் சர்தார். முதியோர் கல்வியைப் பரப்புவதற்கு என்று 160 ஆசிரியர்களுக்கு ஆறுமாதங்கள் பயிற்சி அளிக்கப் பட்டதும் இவரால் தான் என்ருல் அது புனைந்துரை யன்று;

"கண்ணப்பன் எச்சிலை முக்கண்ணன் உண்டார்"
"கண்ணபிரான் கடை நீரையுங் கொண்டார்"

எனவரும் அடிகளால் நமக்குத் தெரிவது என்ன?

கடவுளிடத்து அன்புடையாரிடத்து தீண்டாமையும் இல்லை. வேற்றுமையும் இல்லை. நம் சர்தார் அவர்களும் அப்பொழுது நாட்டில் உலவிய 'தீண்டாமை' என்னும் பேயினை ஒழிக்கப் பல விதங்களில் முயன்ருர். பழம் பெருமைமிக்க வேதாரண்யம் ஆலயத்தை ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் கிடைக்கும்படி செய்தார்.

சில ஆண்டுகளுக்கு முன் பெண்ணுலகம் நம்மவரால் பெரிதும் இழிவுபடுத்தப்பட்டு வந்தது.

இக்கொடுமைகளை நீக்கப் பலர் முன் வந்தனர். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பாடினான் பாரதி. பெண்கல்வி, பெண்ணுரிமை போற்றப்பட்டுச் செயற்பட வேண்டும் என்னும் நோக்கம் நம் சர்தார் அவர்களிடையே எழுந்தது. "பெண்ணுரிமை புதுமை பெறப் பழமை பேசி பெருமையவர் உரிமைகளைப் பெரிதும் போற்றி" அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வேண்டும் செயல்களைச் செய்து வந்தார். அந்த எண்ணத்தின் விளைவாக எழுந்தது தான் நாம் முன்னர் கண்ட 'கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்'.

மது வென்னும் அரக்கனை ஓட்டுவதற்கு இவர் பல ஆண்டுகள் பாடுபட்டார். கள்ளுக்கடை மறியலைத் தொண்டர்களுடன் சேர்ந்து செய்தார். பிறகு அரசினரால் 'மது விலக்கு' கொண்டு வரப்பட்டது. பொல்லா மதுவும் ஒழிந்தது. சர்தார் அவர்கள் தம் மூரிலும், பக்கத்து ஊர்களிலும் உள்ள சுமார் 200 பேர்களுக்கு ஹிந்திப்பாடம் கற்பித்து ஹிந்தித் தேர்வுகளில் தேர்ச்சி அடையச் செய்திருக்கிறார். குறிப்பாக, சிறை வாசத்தின் போதும் பலருக்கு இந்தியினைப் பயிற்றுவித்தார் என்பதும் அறியத்தக்கது.

1946 ஆம் ஆண்டு முதல் வேதாரணியத்தில் சுமார் 250 நிர்மாண ஊழியர்களுக்குப் பல பயிற்சி முகாம்கள் நடத்திப் பயிற்சி கொடுத்துள்ளார். மேலும் இங்கு இயற்கை வைத்தியம், பெண்கள் நிர்மாண ஊழியப்பயிற்சி, இவையும் நடத்தப்பட்டன. நம் மாகாணத்தில் கஸ்தூரிபா மருத்துவ நிதியிலிருந்து

நடத்தப்பட்ட, ' ஸ்ரீகஸ்தூரிபா மருத்துவ நிலையங்கள்'' மேற்பார்வையிடும் பொறுப்பும் இவருக்கு அளிக்கப் பட்டிருந்தது. பல சங்கங்களைத் தம் ஊரில் ஏற்படுத்தி பொது மக்களுக்குப் பல வகையிலும் உற்சாகமும், ஊக்கமும் அளித்து வந்தார். தமிழ் வளர்ச்சிக் கழகத் தின் பொறுப்பாளர் குழுவிலும், செயற்குழுவிலும் அங்கத்தினராக இருந்தார். இதுகாறும் கூறிய வற்றிலிருந்து இவர் தம் வாழ்க்கை ஆரம்பத்தினின்றும், இறுதி வரை தொண்டு வாழ்க்கையாகவே அமைந் திருத்தல் வெள்ளிடைமலை.

**குண நலன்கள்:**

மேற்கூறியாங்கு, பேரறிவும், பேராற்றலும், பெருந் தொண்டும் கொண்டு விளங்கும் ஸ்ரீ வேதரத்னம் அவர்களின் குணச் சிறப்புக்களை ஆராயப் புகுந்தால் அது கடலன்ன விரியும். ஆதலின் சுருக்கமாக இவரை 'குணக்குன்று' எனக் கூறிவிடலாம்.

அருள் என்னும் கடல் மூழ்கி, அன்பு என்னும் துறை படிந்தவர் இவர். அன்பு, அருள், பொறுமை, இன்சொல், செயலாற்றல், வாய்மை என்னும் நற்குணங் களின் பிறப்பிடம் இவர். காந்தியடிகளின் கொள்கை களையும், வழிகளையும் பின்பற்றிச் சேவை செய்து வாழ்ந்தவர். ஆதலின் 'தென்னாட்டுக் காந்தி' என்று மக்களால் பாராட்டப் பெற்றார்.

> ''உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்னும் மறை மொழி இவருக்கே பொருந்தும்.

அகத்தில் தூய்மையும், புறத்தில் எளிய வெள்ளாடையும் உடுத்து, முகத்தில் புன்முறுவலே, இன் சொல்லே உடையவராய், நெற்றியில் திரு நீற்றுடன், சாந்த மூர்த்தியாகத் திகழும் இவரை 'மறைக் காட்டு மணி' என்று குறிப்புப் பெயரிட்டு அன்போடு அழைக்கிறார்கள் என்றால் இவர் பால் மக்கள் கொண்ட அன்பு அளவிடற்கரியது என்று புலனாகிறது.

ஆண்டவனே! கடைசி மூச்சு வரை உன் நினைப்பிலும், சேவையிலுமே ஈடுபடும்படி என்னைச்செய் பிறருக்கென வாழ முடியும் வரை வாழ வேண்டும்; இன்றேல் இறந்து விட வேண்டியது தான்'' என்று இவ்விதம் மகான்கள் கூறுகிறார்கள். இக்கருத்தினைப் பின்பற்றி சர்தார் அவர்கள் தம் வாழ்க்கையினை அமைத்துக்கொண்டார். "தனக்கெனவாழாப் பிறருக்கு உரிமையாளனாக'' இறுதி வரை வாழ்ந்து காட்டிய உத்தம சீலர் அவர்.

அறுபதுக்கு மேற்பட்ட வயதிலும் தினமும் அதிகாலையில் எழுந்து நீராடுதல், எளிய உணவு உண்ணுதல், தன்னைக் காண வருவோர்க்கு காட்சிக்கு எளியனாய் இருந்து அவர்களை அன்புடன் வரவேற்றுப் பேசுதல், தம் கடமைகளில் தவறாது இருத்தல் முதலிய, பிறரால் எளிதில் கடைபிடிக்க இயலாத அரும் பெருங் குணங்கள் இவரிடம் அமைந்திருந்தது வியப்பே! ஆனால் உண்மை. திங்கட்கிழமை தோறும் உண்ணா விரதத்தை, காந்தியடிகளைப் போல் மேற்கொள்வார். வைகறையில் எழுந்து, கடவுள் வணக்கம் முடித்து, தோட்டத்திலே உள்ள கேணியில் தம்கையால் நீர்

முகந்து செடிகளுக்கு இறைப்பார். சில சமயம் வேதாரண்யம் கடலிலே நீண்ட தூரம் நீந்திச்செல்வார். வேறு சில சமயம் நீண்ட தொலைவு நடப்பார். இவ்வாறு காய சித்தி அடைந்த அவரது உடல் 65 வது வயதில் இயற்கையை அடைந்தது வியப்பேயாகும் என்று தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகளுடன் தொண்டாற்றியவரான குடந்தை வை. துரைசாமி பிள்ளையவர்கள் கூறுகிறுர்கள்.

ஓய்வு நேரத்தில் சர்தார் அவர்கள் தம் ஆடைக்கு வேண்டிய நூலைத் தாமே இராட்டையால் நூற்றுக் கொள்வார். சிறு குழந்தைகளிடமும் இனிமையாகப் பேசும் இயல்பினர். அதனுல் தான் குருகுலக் குழந்தைகளும் 'அப்பா' என்று அன்போடு அவரை அழகாக அழைப்பர். பரத நாட்டியத்திலும், கர்நாடக சங்கீதத்திலும் இவருக்கு நல்ல ஞானம் உண்டு.

தேவாரம், திருவாசகம் போன்ற பக்தித் தேன் சொட்டும் பாடல்களைக் கேட்பதில் விருப்பம் அதிகம். பசுமையான செடிகளை வெட்டுவதற்கும், பூக்களைப் பறித்து பயன்படாமற் செய்வதற்கும் ஒருப்படார். வாரத்தில் நான்கு நாட்கள் வெளியூரில் தங்கிவிட்டுத் திரும்பினுலும், இரவு எந்நேரமாயினும் தபால்களை எல்லாம் பார்த்து, பதில் எழுதிவிட்டுத் தான் படுக்கைக்குச் செல்வார் என்றுல் அவர் தம் கடமை வாழ்வு தெற்றெனப் புலப்படுகின்றது.

இமயமலையின் உச்சியைக் காணுவதில் உள்ள துன்பங்கள் அதிகம் என்று வரலாறு கூறுகின்றது.

அதனைக் காணுவதிலேயே இவ்வளவு சிரமம் இருக்குமானல் தன்னைத் தானே வெற்றிகொள்வதில் சிரமம் அதிகம் இருக்கத்தானே செய்யும். இமயமலையை அளப்பதில் உள்ள துன்பம், வெற்றி, மகிழ்ச்சி ஆகியவை நிரந்தரமானவை யன்று. தன்னைத் தானே வெற்றி கொள்வதில் தான் பேரானந்தம் உண்டு. இந்த ஆனந்தம் குறைவுபடாமல் வர வர வளர்ந்து கொண்டே இருக்கும்.

கதர் உடுத்துவதிலும், மற்ற செயல்களைச் செய்யும் போது மட்டும் காந்தியைப் பின்பற்றினர் என்று எண்ணுதல் தவறு. பெருமை பொருத்திய பிரம்மச்சர்யத்தைத் தம் வாழ்விலும் கடைப்பிடித்து உயிரினும் மேலாகப் போற்றினர். அவருக்கு ஒரே ஒரு மைந்தன் தான் உண்டு இல்லறத்திலிருந்தாலும், தம் மனைவி, மக்களோடு கூடியிருந்தாலும், அவர் தம் மனைவியைச் சகோதரிபோல் பாவித்து அவர் தம் 25–வது வயதிலேயே வானப் பிரஸ்த நிலையில் (இல்லறத் துறவியாக) வாழ்ந்தார் என்று கூறினல் அது புனைந்துரை யன்று.

தம் வாழ்க்கையில் வள்ளுவம் காட்டும் வழியிலேயே, அதன் கொள்கைகளைப் பின்பற்றி நடப்பவர் சர்தார் அவர்கள். அவருடைய மடியிலேயே எப்பொழுதும் திருக்குறள் புத்தகம் ஒன்று இருக்கும். எனவே “குறள் நெறிச் சான்றோர்” என்ற பெயரினை இட்டு நாம் அழைத்தால் அது தகும் அவர்க்கு.

“கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்”

என்ற செந்நாப் போதார் குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர், தஞ்சையின் புகழை வளர்த்த தோன்றல். சர்தார் அவர்கள் நீண்ட நேரம் 'ஒலிபெருக்கியின்' உதவியின்றி பேசும் வல்லமை பெற்றவர். பேசும் பொழுது, கடல் மடை திறந்தன்ன சொற்செறிவையும், இடை இடையே ஆங்கிலக் கலைச் சொற்களைக் கலந்து பேசும் அழகையும் என்னென்று கூறுவது.

அவர்கள் கலந்துகொள்ளுகின்ற கூட்டங்களில், மேடையில் எழுந்து, "மெய்யன்பர்களே" என்று விளித்துப் பேசத் துவங்கும் முறையும், கவர்ச்சியும் யாருக்கும் எளிதில் கை வரப்பெறாத ஒரு ஆற்றலாகும். "இரும்பு உள்ளமென்றால் அதில் அன்பு இல்லை என்பது இல்லை. மேடைகளிலே வீர முழக்கம் செய்தாலும், மேடையைவிட்டு இறங்கியதும் அன்புடன் எல்லோருடனும் அளவளாவுவார்" என்று சர்தாரைப்பற்றி பம்பாய் கவர்னராக இருந்த, ஸ்ரீ ப. சுப்பராயன் அவர்கள் கூறியுள்ளார்கள் என்றால் சர்தார் அவர்களின் பேச்சுக் கலை வன்மை புலனாகும்.

பொருள், புகழ், பதவி என்னும் மனிதன் விரும்பும் பேய்களையும் தம்மிடத்திருந்து ஓட்டிய உத்தமர் இவர். அன்னாருடைய நோக்கம் காங்கிரஸ் கட்சிக்குத் தொண்டு செய்வதும், மக்களுக்குச் சேவை செய்வதுமே. இவர் தம்மை ஒரு அரசியல் வாதி என்று கூறிக்கொள்வதில்லை. அவர்களின் கடமை உணர்வு நாமெல்லாம் அறிந்து பின்பற்றப்படவேண்டிய ஒன்று. அதனைக் காலஞ்சென்ற கல்கி வாயிலாகவே அறிவோம். "தமிழ் நாட்டுத் தேச பக்தர்களில் ஒருவர் சர்தார்

அ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள். இவர் பழைய சென்னை சட்ட சபையில் அங்கத்தினராய் இருந்தவர்.

மிக மிக விழிப்புடன் நின்று முக்கியமான விவாதங்களில் கலந்துகொண்டு மக்களின் தேவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னவர். சென்ற ஐந்து வருடத்துச் சென்னை சட்ட சபையின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தெரியும். ஒரு சட்ட சபைக் கூட்டத்திற்காவது சர்தார் அவர்கள் பங்கு பெருமல் இருந்தது கிடையாது.

இஃதே போன்று, மத்திய அரசின், இரும்பு உருக்காலைத் தொழில் அமைச்சராக இருந்த ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களும் சர்தார் அவர்களின் கடமை, பொறுப்பு உணர்ச்சியைச் சுட்டிக் காட்டியுள்ளார். சட்ட சபை அங்கத்தினர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு சர்தார் அவர்கள் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினுர்கள். தவிர்க்கமுடியாத காரியம் இருந்தால் ஒழிய சட்ட சபை கூட்டத்திற்கு நிச்சயம் வந்தாக வேண்டும் என்ற உறுதிகொண்டவர். காலை எட்டரை மணி முதல் ஒன்றரை மணி வரை முழு நேரமும் சட்ட சபையிலேயே உட்கார்ந்து இருக்க வேண்டும் என்ற உறுதியைக் கொண்டவர்" என்பது அவர் தம் கூற்று. இதுகாறும் கூறியவற்றிலிருந்து சர்தார் அவர்கள் கடமை வாழ்வைக் கண்ணைக் காத்து வந்தார் எனத் தெரிகிறது.

**இறுதிக்காலம் :-**

குறள் காட்டும் அரசனது தன்மையைப் பெற்று, கீதை கூறும் உயர்ந்த லட்சியத்தைக்

கடைப்பிடித்த மாபெரும் வீரராகிய, தொண்டராகிய சர்தார் அவர்களை நம்முடனே இணைந்திருக்கச் செய்ய கண்ணிலனாகிய அக்கூற்றுவனுக்கு விருப்ப மில்லை போலும். நம்மிடையே இருந்து அவரை, உத்தமரைப் பிரிக்க முயற்சி செய்தான். அம் முயற்சியின் விளைவு சர்தார் அவர்கள் இருதய அடைப்பினால் துன்புற்றார்கள். சட்டசபைக் கூட்டத் திற்குப் புறப்படுமுன், இனிமேல் வரும் கூட்டங் களுக்குச் செல்லலாம், இப்பொழுது உடல் நலம் சரியில்லையே எனப் பல பெரியோர்கள் தடுத்தனர். அதற்கு அவர் இப்போது எனக்கு உடல் நலம் நன்றாக உள்ளது. சட்டசபை கூடும்போது நான் போகாமல் இருந்தால் என் கடமையினின்றும் தவறியவனாவேன் அப்படிக் கடமையைச் செய்யும் பொழுதே என் உயிர் பிரிந்தால் அது பற்றி எனக்கு மகிழ்ச்சியே'' என மொழிந்தார். சட்ட சபைக்கும் சென்றார். கூட்டத்திலும் பேசினார். அதற்கு இரண்டு நாள் பின்னர் இயற்கை எய்தினார் அந்தோ! தமிழ்நாடு ஒரு மாபெரும் தலைவரை இழந்தது. அவரால் நிறுவப்பட்ட குருகுலம் அருமைத் தந்தையையே இழந்து விட்டது.

சர்தார் வேதரத்னம் அவர்கள் காலமானபோது [24—8—1961] உயர்திரு இராஜாஜி அவர்களும் இரும்பு உருக்காலைத் தொழிலமைச்சர் உயர்திரு சி. சுப்ரமணியம் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினரான, திரு M. கல்யாணசுந்தரம் M. L. A. அவர்களும், பேராசிரியர் க. அன்பழகன் M. A., M. L. C. அவர்களும், சென்னை சட்டசபையில்,

குருகுலத் தந்தையாம் அ. வேதரத்தினம் அவர்களின் சீரிய பண்பினையும், நாட்டிற்கு அவர் ஆற்றிய பணியினையும் எடுத்துரைத்து வருந்தினர். இராஜாஜி அவர்கள் அன்னாரைக்குறித்து "ஸ்வராஜ்யா" பத்திரிக்கையில் எழுதியது,

"காந்தீயத்தீதைப் பின்பற்றி வந்த, சென்னைக் காங்கிரஸைச் சேர்ந்தவர்களில் கடைசி மனிதனாக இருந்த வேதரத்தினம் அவர்களும் மறைந்தார். காந்தி உயிருடனிருந்த பொழுது, அவரது பாதையில் சென்று கொண்டிருந்து விட்டு தற்போது அதைப் பின்பற்றாத மக்கள் கையில் காங்கிரஸ் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நல்ல மனிதர்கள் எல்லோரும் இத்தகைய மனிதர்கள் கையில் காங்கிரஸை ஒப்படைத்து விட்டு மறைகின்றனர்."

"தனிப்பட்ட முறையில் கூறப் போனால் தமிழ்நாட்டின் அரசியல் துறையில் எனக்கு உதவி செய்த எனது சொந்தச் சகோதரனை, நான் இழந்தவனைப் போன்றவனாகின்றேன். எனக்கு உதவி செய்வதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும், தைரியமும் என்றும் பொய்த்துப் போனதில்லை. நான் இதற்கு முன்பு செய்துள்ள எத்தனையோ பெரிய செயல்களிலும், தற்போது செய்து வரும் செயல்களிலும் எத்துணை இடையூறுகள் உள்ளன என்பதை அவரே அறிவார். மறைந்த அவரது பெருமையை உலகுக்கு எடுத்துக் கூற நினைவுச் சின்னங்கள் உதவுமானால் வேதாரண்யத்தை வேத

ரத்தினம் அவர்களின் நிலைத்துநிற்கும் நினைவுச் சின்னம் என்று கூறலாம்.

இரும்பு உருக்காலைத் தொழில் அமைச்சர் 25—8—61 இல் சட்டசபையில் நிகழ்த்திய உரை:—

ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு எவ்வளவு பெரிய பணியை ஆற்றினர் என்பது நாம் எல்லோரும் அறிவோம். தமிழ்நாடு சுதந்திர இயக்க வரலாறு எழுதப்படுகிற காலத்தில் ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை எடுத்துக்கொண்ட பங்கு அதில் பெரிய பகுதியாக இருக்கும். அவர்களை நான் 25 ஆண்டு காலமாக அறிவேன். அவருடைய தேசபக்தி என்றும் மாறாத பக்தி. அவர்களுடைய இலட்சியத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். அவர்களுடைய கடமை உணர்ச்சியின் காரணமாகத்தான் அவர்களுக்கு இவ்வளவு சீக்கிரமாக மரணம் ஏற்பட நேர்ந்தது. சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அவர்கள் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினர்கள். தேசபக்தியிலும், கடமை உணர்ச்சியிலும் எவ்வாறு இருந்தார்களோ அதே மாதிரிதான் மதப் பற்றிலும் அவர்களுக்குத் தளராத நம்பிக்கை இருந்தது. அனாதைகளாய் விடப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்வு வளம் பெறுவதற்காக ஒரு கன்யா குருகுலத்தை நடத்தி வந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு நல்வாழ்வு பெற்ற பெண்கள் அவர்களை வாழ்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

எதிர்க் கட்சியைச் சார்ந்த திரு M. கல்யாண சுந்தரம் M. L. A. அவர்கள் சென்னை சட்ட மன்றத்தில் 25—8—61 இல் நிகழ்த்திய உரை.

"நண்பர் வேதரத்னம் அவர்களை இழந்து நாம் அதிக துக்கத்திற்கு ஆளாக நேர்ந்ததை குறித்து நான் மிகவும் வருத்தப்படுகின்றேன். வேதாரண்யம் என்ற ஊரும், வேதரத்னம் என்ற பெயரும் சுதந்திரபோராட்டச் சரித்திரத்தில் நிச்சயமாக இடம் பெறும். அந்தக்காலத்தில் போராட்டம் நடத்துவது என்பதும், காங்கிரசில் அங்கத்தினராக இருப்பதும் அவ்வளவு சுலபமல்ல. காங்கிரஸில் அங்கத்தினராக இருப்பது என்பதே வீரத்திற்குரிய விஷயம். காந்தி அவர்கள் எழுதியது போல "பீரங்கிக்குப் பின்னால் நின்று பீரங்கியை முடுக்கி விட்டுச் சுடுவது வீரமல்ல பீரங்கிக்கு எதிராக நின்று அதைச்சமாளிப்பது, உயிர் போனாலும் உறுதியை விடமாட்டோம் என்ற நிலையில் இருப்பதுதான் வீரம்.

அந்த மரபில் தோன்றி தனக்குரிய பங்கைச் செலுத்திய மகான் வேதரத்னம் அவர்கள். 1930 இல் கையில் கொடியை ஏந்திக் கால் நடையாகச் சென்ற இராஜாஜி. வேதரத்னம் போன்றவர்களை நான் என்றும் மறக்க மாட்டேன். அதற்குரிய நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும். கடமையை ஆற்றிக் கொண்டிருந்த நேரத்தில் நம்மை விட்டுச் சென்று விட்டார். என்றைய தினம் பிரக்ஞையை இழந்தார்களோ அன்றைய தினம் கூட இந்தச் சபையில் வந்து,

கேள்விகள் கேட்டு, வாதப் பிரதி வாதங்கள் நடத்தினார்கள். அவருடைய கடமை உணர்ச்சியை நாமெல்லாம் மறந்துவிட முடியாது.

தற்போது சட்ட மன்ற உறுப்பினராகப் பணி புரியும் க. அன்பழகன் M. A., M. L. C. அவர்கள் அ. வேதரத்தினத்தைப் பற்றிக் கூறியது.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களைப் போன்று தனக்கென வாழாது பிறருக்குரியவராகத் திகழ்ந்த சிறப்பும் அவருக்கு உரியது. அவரது எதிர்பாராத மறைவு ஏற்படுத்திய இழப்பை, அவரது நினைவும், அதன் வழிப்பிறக்கும் தொண்டும், பண்பும் நிறைவு செய்ய வேண்டும்.

திருவள்ளுவர் கூறுவது போல்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

என்ற பெருமை தான் நம் உலகிற்கு உண்டு போலும் என்று எண்ணிக் கலங்க வேண்டிய அளவிற்கு இன்றைய தினம் அவர்கள் மறைந்திருக்கிறார்கள். இந்த நாட்டின் விடுதலை இயக்கத்தில் ஒரு பெரிய வீரனாக அவர்கள் இருந்தார்கள். அவருக்குச் செலுத்த வேண்டிய வீர வணக்கத்தில் நானும் என் கட்சியைச் சார்ந்தவர்களும், எங்கள் பங்கினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சர்தார் அவர்கள் தம் வாழ்நாள் முழுமையும் வாங்கிக் கற்ற நூல்கள் அனைத்தையும் [ சுமார் 5000 ] தன்னிடமிருந்த வானொலிப் பெட்டியினையும் குருகுலத்திற்கே அளித்துவிடல் வேண்டும் என எண்ணினர்.

நிறைவு பெருமல் இருக்கும் உப்புச் சத்தியாக்கிரக நினைவுக் கட்டிடத்தை முடித்துவிடல் வேண்டும் என்றும் கூறினர். 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை'யென தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றினர் அவர் தம் அருமை மகனரான உயர்திரு. அப்பாக்குட்டி அவர்கள்.

முடிவுரை :

இன்று நாமெல்லாம் சுதந்திர இந்தியாவின் இன்பம் பல கொண்டு இன்புற்று வாழ்கின்ருேம் என்ருல் அதற்கு, சர்தாரைப் போன்றவர்கள், அன்று தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து இன்னல்கள் பலவற்றைச் சிரிப்புடன் ஏற்று, வாழ்ந்ததே காரணமாகும். இந்தியர்கள் நன்றி மறவாதவர்கள், நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள், தியாகத்திற்குத் தலை வணங்குபவர்கள் என்பதெல்லாம் உண்மையானல் சர்தாரைப் போன்ற மாபெருந் தொண்டர்களின், தியாகிகளின் வரலாற்றினைப் படித்து, அதன் வழி நடந்து – பேரும் புகழும் அடைவோமாக !

“ மலர் வாழ்க்கை ஒரு நாளே
எனினும் தன் மணந் தன்னை
பலவாய அதன் நிறத்தைப்
பார்த்தவரும் நுகர்ந்தவரும்
பல காலம் நினைத்திருப்பார்
அதுபோல
நிலையாக எம் நெஞ்சில்
நிலைத்திருக்கும் நும் நினைவே ”

**வாழ்க சர்தார் நாமம்!**

**பாரதி அச்சகம், குடந்தை**